இன்றைய செய்தி நாளைய வரலாறு

முரசொலி

விழுவது நாமாக இருப்பினும் வாழ்வது தமிழாக இருக்கட்டும்

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

வியாழக்கிழமை 19.03.2026

பழனிசாமி ஆட்சியின் பழைய நிலவரங்கள் -1

மிக மோசமான இருண்ட ஆட்சிக் காலத்தை நடத்தியவர் எடப்பாடி பழனிசாமி. அதை எல்லாம் மக்கள் மறந்திருப்பார்கள் என்று நினைத்து வாய் நீளம் காட்டிக் கொண்டு இருக்கிறார் பழனிசாமி.

'கொடநாடு' என்று சொன்னாலே 'கொல நடுக்கம்' ஏற்படும் பழனி சாமிக்கு.

கொடநாடு பங்களாவில் கொலை, கொள்ளை நடந்தது 2017 ஏப்ரல் 23 ஆம் தேதி. அப்போது முதலமைச்சராக இருந்தவர் பழனிசாமி. அன்றைய தினமே ஓம் பகதூர் என்ற காவலாளி கொலை செய்யப்பட்டார். அடுத்த ஐந்தாவது நாள் - அதாவது ஏப்ரல் 28 ஆம் தேதி ஆத்தூர் அருகே உள்ள முல்லைவாடி சந்தனகிரி புறவழிச்சாலை - தென்னங்குடி பாளையம் என்ற இடத்தில் ஜெயலலிதாவின் கார் டிரைவர் கனகராஜ் மர்மமான முறையில் இறந்து கிடந்தார். இருசக்கர வாகனத்தில் சென்ற கனகராஜ் மீது கார் மோதியதாக அ.தி.மு.க. ஆட்சியில் வழக்குப் பதியப்பட்டது. 'இது விபத்து அல்ல; என் சகோதரர் மரணத்தில் மர்மம் உள்ளது' என்று கனகராஜின் சகோதரர் தனபால் அன்று முதல் சொல்லி வருகிறார்.

கனகராஜ் சொல்லி கொடநாடு சம்பவத்தைச் செய்த சயான் என்பவர் மீதும் இதேபோல் மர்மமான கார் மோதுகிறது. அதில் சம்பவ இடத்தி லேயே சயானின் மனைவியும், மகளும் மரணம் அடைகிறார்கள். கொடநாடு எஸ்டேட்டின் சி.சி.டி.வியை கையாளும் தினேஷ்குமார் என்பவர் மர்மமான முறையில் தற்கொலை செய்து கொள்கிறார்.

இந்த வகையில் ஒரு கொள்ளை - ஒரு கொலை - மூன்று மர்ம மரணங்கள் - ஒரு தற்கொலை ஆகியவை நடந்த மர்மமான வழக்கு இது. பழனிசாமி ஆட்சி செய்த போதுதான் இது நடந்தது. அ.தி.மு.க. ஆட்சியில் சிலரை கைது செய்து கணக்குக் காட்டி முடிக்கப் பார்த்தார்கள். தி.மு.க. ஆட்சி மாறியதும், வழக்கின் விசாரணை உண்மையாக நடக்கத் தொடங் கியது.

ஜெயலலிதாவின் கார் ஓட்டுநரான கனகராஜின் அண்ணன் தனபால் ஊடகங்களுக்கு அளித்த பேட்டியில், **"கொடநாடு கொலை, கொள்ளை, மர்ம மரணங்கள் தொடர்பாக எடப்பாடி பழனிசாமியிடம் விசாரணை நடத்த வேண்டும். கொடநாட்டில் இருந்து 5 பைகள் நிறைய ஆவணங்களை எனது தம்பி கனகராஜ் கொண்டு வந்தார். பெருந்துறையில் வைத்து அதனை என்னிடம் காண்பித்தார். அதில், 3 பைகள் சங்ககிரிக்கும், 2 பைகள் சேலத் திற்கும் எனது தம்பி எடுத்துச் சென்று கொடுத்தார். அப்போது சயானும் உடனிருந்தார். எடப்பாடி பழனிசாமி சொல்லித்தான் இதனை எனது தம்பி செய்தார். ஆனால் எனது தம்பியை பலிகடாவாக்கிவிட்டனர். தற்போது எனது உயிருக்கும் ஆபத்து ஏற்பட்டுள்ளது. எனவே போலீஸ் பாதுகாப்பு வழங்க வேண்டும்"** என்று சொன்னார். இதற்கெல்லாம் பழனிசாமி இதுவரை விளக்கம் அளிக்கவில்லை.

என்ன சொன்னார் தெரியுமா? 'கனகராஜ், ஜெயலலிதாவின் கார் டிரை வர் அல்ல; சசிகலாவின் டிரைவர்தான்' என்று விளக்கம் அளித்தார் பழனி சாமி. கனகராஜ், யார் காரை ஓட்டினார் என்பதல்ல பிரச்சினை. அவரது மரணத்தில் இருக்கும் மர்மம்தான் பிரச்சினை.

"கனகராஜை, ஜெயலலிதாவின் கார் டிரைவர் என இனி யாரும் சொல் லக் கூடாது. அவர் சசிகலாவுக்கு கார் டிரைவராக இருந்தவர். கனகராஜை, ஜெயலலிதாவின் கார் டிரைவர் என்று இனி யாராவது சொன்னால் நீதி மன்றத்தில் வழக்குத் தொடர்வோம். கொடநாடு பற்றி யாரும் பேசக் கூடாது. அந்த வழக்கு நீதிமன்றத்தில் இருக்கிறது" - இப்படி பேட்டி தந்தவர்தான் பழனிசாமி. இந்த வழக்கை தி.மு.க. ஆட்சியில் மீண்டும் விசாரிக்கத் தொடங் கியதும் சட்டமன்றத்துக்கு கருப்புச் சட்டையுடன் வந்து பிரச்சினை செய்தார் பழனிசாமி. உடனே ஓடிப் போய் ஆளுநரிடம் மனுக் கொடுத்தார் பழனிசாமி. 'கொடநாடு வழக்கை மீண்டும் விசாரிக்கக் கூடாது, என்னைக் கைது செய்ய சதி நடக்கிறது' என்று பேட்டி கொடுத்தார். கொடநாடு வழக்கில் பழனிசாமி யின் பதற்றம் இன்று வரை தொடர்கிறது.

ஜெயலலிதாவின் கொடநாடு வழக்குக்கே நீதி சொல்ல முடியாத பழனி சாமிதான் இன்று சட்டம் ஒழுங்கைச் சொல்லி வெட்கம் இல்லாமல் ஆர்ப் பாட்டம் நடத்திக் கொண்டு இருக்கிறார்.

கள்ளச்சாராயம் பற்றி கப்சாக்களை அடித்து விடுகிறார். 1993 ஆம் ஆண்டு ஜெயலலிதா ஆட்சியில் விழுப்புரத்தில் 9 பேரும், திருத்தணியில் 7 பேரும் கள்ளச்சாராயத்தால் இறந்தார்கள். 1996 ஆம் ஆண்டின் தொடக் கத்தில் ஜெயலலிதா ஆட்சியில் உறையூரில் 10 பேர் இறந்தார்கள். 2001 ஆம் ஆண்டு பண்ருட்டியில் கள்ளச் சாராயத்துக்கு 52 பேர் பலியானார் கள். அதே ஆண்டில் செங்குன்றம் பகுதியில் 30 பேர் இறந்தார்கள். செங் குன்றம் சம்பவம் தொடர்பாக கைது செய்யப்பட்ட 19 பேர் மீதான விசார ணையில் அ.தி.மு.க. ஆட்சி சரியான முறையில் செய்யாததால் 2018ஆம் ஆண்டு 19 பேரையும் வழக்கில் இருந்து விடுதலை செய்தது நீதிமன்றம். "35 பேர் கள்ளச்சாராயத்தால் பலியானது வேதனையானது என்றால் அதை நிரூபிக்க அரசு தரப்பு போதுமான ஆதாரங்களை தாக்கல் செய்ய வில்லை" என நீதிபதி எம்.வி.முரளிதரன் தீர்ப்பில் குறிப்பிட்டு இருந்தார். இதுதான் அ.தி.மு.க. ஆட்சியின் லட்சணம் ஆகும்.

- **இதே பழனிசாமி - முதலமைச்சராக இருந்தபோது 2017 ஜூலை 9 - அன்று பழனிசாமியின் சொந்த மாவட்டமான சேலத்தில் கள்ளச் சாராயம் அதிகமாக விற்பனை என நியூஸ் 7 செய்தி வெளியிட்டது.**
- **2018 மே 19 - நாகை மாவட்டம் பட்டப்பகலில் கல்லூரிக்கு அருகில் 20 ரூபாய்க்கு சாராயம் விற்கும் சிறுவர்கள் என்ற வீடியோவை நியூஸ் 18 வெளியிட்டது.**
- **2019 நவம்பர் 8 - கல்வராயன் மலைப் பகுதியில் பள்ளிச் சீருடையில் கள்ளச்சாராயம் விற்கப்பட்டதாக செய்திகள் வெளியானது.**
- **2019 நவம்பர் 14 - சேலம் மாவட்டத்தில் கள்ளச்சாராயம் விற்பனை நடந்ததாக ராஜ் டி.வி. செய்தி வெளியிட்டது.**
- **2019 ஜனவரி 11 - பண்ருட்டி அருகே கீழ்மாம்பட்டு கிராமத்தில் 750 லிட்டர் சாராயம் பறிமுதல் செய்யப் பட்டது. முடப்பள்ளி கிராமத்தைச் சேர்ந்த அ.தி.மு.க. பிரமுகர் சிவக்குமார் மீது வழக்குப் போடப்பட்டது.**

– தொடரும் –

சட்டப்பேரவைத் தேர்தல் - 2026

இந்திய கம்யூனிஸ்ட் கட்சிக்கு 5 தொகுதிகள்

நேற்று (18.3.2026) சென்னை, அண்ணா அறிவாலயத்தில், 2026 சட்டமன்றப் பொதுத் தேர்தலையொட்டி, கழகத்திற்கும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சிக்கும் இடையேயான தொகுதி உடன்பாடுகள் குறித்த ஒப்பந்தத்தில் கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்களும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலக்குழுச் செயலாளர் மு.வீரபாண்டியன் அவர்களும் கையெழுத்திட்டனர். உடன், கழகப் பொதுச் செயலாளர், அமைச்சர் துரைமுருகன், கழகப் பொருளாளர், டி.ஆர்.பாலு எம்.பி., முதன்மைச் செயலாளர், அமைச்சர் கே.என்.நேரு, துணைப் பொதுச் செயலாளர் ஆ.ராசா எம்.பி, அமைச்சர்கள் எ.வ.வேலு, எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, செய்தி தொடர்பு தலைவர் டி.கே.எஸ். இளங்கோவன், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் முன்னாள் மாநில செயலாளர் இரா.முத்தரசன், சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் கோ.பழனிசாமி மற்றும் நிர்வாகிகள் உடனிருந்தனர்.

நடைபெற உள்ள 2026 சட்டமன்றப் பொதுத் தேர்தலில், திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களும் – இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநிலக்குழுச் செயலாளர் மு. வீரபாண்டியன் அவர்களும் நேற்று (18–3–2026), தொகுதி உடன்பாடுகள் குறித்து கலந்து பேசியதில், மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியில் இடம் பெற்றுள்ள இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, தமிழ்நாட்டில் 5 (ஐந்து) சட்டமன்றத் தொகுதிகளில் போட்டியிடுவதென முடிவு செய்யப்பட்டது.

(மு. வீரபாண்டியன்)
செயலாளர்,
இந்திய கம்யூனிஸ்ட் கட்சி
தமிழ்நாடு மாநிலக் குழு

(மு.க.ஸ்டாலின்)
தலைவர்,
தி.மு.க.

விளாத்திகுளத்தில் ஒன்றிய அரசைக் கண்டித்து ஆர்ப்பாட்டம் !

விளாத்திகுளம், மார்ச் 19- ஒன்றிய அரசின் கொள்கைகள் தமிழ் நாட்டின் வளர்ச்சிக்கும் மாநில உரிமைகளுக் கும் பாதிப்பு ஏற்படுத் துவதாகக் குற்றம் சாட்டி, திராவிட முன் னேற்றக் கழகம் மற்றும் மதச்சார்பற்ற முற் போக்கு கூட்டணிக் கட்சிகள் சார்பில் வி ள ா த் தி கு ள ம் பேருந்து நிலையம் முன்பு கண்டன ஆர்ப் பாட்டம் தூத்துக்குடி வடக்கு மாவட்ட தி. மு.க. சார்பில் விளாத்தி குளம் சட்டமன்றத் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் ஜீ.வி.மார்க் கண்டேயன் தலைமை யில் நடைபெற்றது.

நிகழ்வில் மாநில நெசவாளர் அணி துணைச் செயலாளரும் பாளையங்கோட்டை சட்டமன்றத் தொகுதி தேர்தல் பார்வையாள ருமான வசந்தம் ஜெயக்குமார், ஒன்றிய செயலாளர்கள் ராம சுப்பு, சின்னமாரி முத்து, அன்புராஜன், இமானு வேல், விளாத்திகுளம் பேரூர் கழகச் செய லாளர் வேலுச்சாமி, விளாத்திகுளம் பேரூ ராட்சி மன்ற தலைவர் சூர்யா ஐயன்ராஜ் உள் ளிட்ட கூட்டணி கட்சி நிர்வாகிகள், பொதுமக் கள் கலந்து கொண்டனர்.

நெல்லை மத்திய மாவட்ட தி.மு.க. சார்பில் சங்கர்நகர்நாரணம்மாள்புரம் பேரூர் தி.மு.க.ஏற்பாட்டில் 'தமிழ்நாடு தலைகுனியாது' திருநெல்வேலி சட்டமன்றத் தொகுதி நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் சங்கர் நகர் அமோகா பேலஸில் நெல்லை மத்திய மாவட்டப் பொறுப்பாளர் மு.அப்துல் வஹாப் எம்.எல்.ஏ. தலைமையில் நடைபெற்றது. தலைமைச் செயற்குழு உறுப்பினர் பேச்சிபாண்டியன் வரவேற்புரையாற்றினார். இந்நிகழ்வில் முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் பங்கேற்று பல்வேறு ஆலோசனைகளை வழங்கி உரையாற்றினார். நிகழ்வில் முன்னாள் எம்.பி. ரவீந்திரநாத், முன்னாள் எம்.எல்.ஏ. மாலைராஜா, அய்யப்பன், கழக நிர்வாகிகள் முருகன் தர்மன், கிரிஜா குமார், விஜிலா சத்யானந்த், தினேஷ், டாக்டர்.ரவி, ராமகிருஷ்ணன், பிரான்சிஸ், மாரியப்பன், அருள்மணி, அன்பழகன், பேச்சிகுட்டி, செல்வபாபு உள்பட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர். நிகழ்ச்சி நிறைவில் மனோஜ் பிரபு, முத்துராமலிங்கம் ஆகியோர் நன்றியுரையாற்றினர்.